1979 மார்ச் 3]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றும் தொழிலாளர்கள் வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்ற நல்ல முயற்சியை மேற்கொள்ளும்பொழுது அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகாமையில் இப்படிப்பட்ட இடங்களை அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் செயல்பட்டு வருகிறது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்குக் கோவை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வீடு கட்டப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்தில் முழுக்க முழுக்க சேரன் போக்குவரத்தைத் தவிர வேறு வண்டிகளோ அல்லது ஊழியர்களோ இல்லை, ஆகவே, நீலகிரி மாவட்டம் புறக்கணிக்கப்படாமல் அங்கே தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட இடங்களைத்தான் குறிப்பிட்டேன். கட்ட இருக்கின்ற இடங்களிலே நீலகிரி மாவட்டமும் கருத்தில் கொள்ளப்படும்.

கெடிலம் ஆற்றின் அருகே நில ஆக்கிரமிப்பு

* வினா எண். 210—திரு. இல. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(ஆ) திருநாவலூர் தொகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் கெடிலம் நதிக்கு அருகாமையில் உள்ள இடம் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு ஓர் அரிசி ஆலையும், விடுதியும் கட்டி நடத்தப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். (அ) அரசுக்கு இதுபற்றித் தெரியும்.

(ஆ) மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.